தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்
(தமிழ்நாடு அரசின் நிறுவனம்)

முனைவர் ம. கோவிந்த ராவ், இ.வ.ப.
நிர்வாக இயக்குநர்

கரூர் சாலை, மல்லாச்சிபுரம்,
கம்பரசம் பேட்டை,
திருச்சிராப்பள்ளி.

ந.க. எண்: வ1 / 4140 / 2015 நாள்: : 05–12–2015

பெறுநர்:
மாவட்ட வன அலுவலர்,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
திருச்சி –1.

பொருள்: திருச்சி மாவட்டம், முசிறி தாத்தையங்கார்பேட்டை துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஒன்றியங்களை சார்ந்த 293 ஊரக குடியிருப்பிடங்களுக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு அய்யம்பாளையம் காப்புக் காட்டில் நிலம் கேட்பது – தொடர்பாக.

பார்வை:
1) அரசு ஆணை எண்.58, நாள் 23–03–2015.
2) உ.செ.பொ, முசிறி எண்F.CWSS 293 F.P/AEE/RWS/MSI/2015, நாள் 04–11–2015.
3) செ.பொ.TWAD, திருச்சி எண்.F.CWSS 293/Forest/JDO/2015, நாள் 13–11–2015.
4) இவ்வலுவலல எண் வ1/4140/2015, நாள் 16–06–15 & 23–11–2015.
5) மண்டல மேலாளர், புதுக்கோட்டை எண் 2617/2015/எம்(1), நாள் 01–12–2015

******

பார்வை (1)–ன் அரசு ஆணையின்படி, பார்வை (2) மற்றும் (3)–ல் உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தமது கடிதங்களில், திருச்சி மாவட்டம் முசிறி, தாத்தையங்கார்பேட்டை,துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஒன்றியங்களை சார்ந்த 293 ஊரக குடியிருப்பிடங்களுக்கு காவேரி ஆற்றிலிருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு, தமிழ்நாடு வனத் தோட்டக் கழக பொறுப்பிலுள்ள அய்யம்பாளையம் காப்புக்காட்டின் வழியாக நடைப்பாலம் அமைப்பதற்கு $650M^2$ (65M x 10M) மற்றும் கட்டுப்பாட்டு அறை போன்றவை அமைப்பதற்கு $1000M^2$ ($40 \times 25M^2$) மொத்தம் $1650M^2$ (or) 0.165ha நிலம் தேவை என்று கேட்டுள்ளார். இது தொடர்பாக இவ்வலுவலக பார்வை (3)–ல் மண்டல மேலாளர், புதுக்கோட்டையிடம் குறிப்புரை கேட்கப்பட்டது.

த.பி.பா.

பார்வை (4))–ல் மண்டல மேலாளர் மேற்கண்ட நிலப்பகுதியை G.P.S. கருவி மூலம் அளவிட்டு, 0.17 ஹெக்டேர் வருகிறது என்றும், இப்பகுதி 2015 அய்யம்பாளையம் 1.71 ஹெக்டேர் தைல தோட்டத்தில் அமையவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இப்பகுதி 0.17 ஹெக்டேரில் வளர்க்கப்பட்ட தைல தோட்டத்தின் வருவாய் இழப்பு ரூ.34,733.35 அல்லது 35,000/– என கணக்கிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்பட்ட கடித நகல்கள், அரசாணை எண்.58, நாள் 23–03–2015 நகல் மற்றும் மண்டல மேலாளரிடமிருந்து பெறப்பட்ட வரைப்படம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. கழக இழப்பீட்டுத் தொகை ரூ.35,000/–யை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து பிடித்தம் செய்து கழகத்திற்கு செலுத்தி விட்டு வனச் சட்டப்படி மேற்கண்ட நிலத்தை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றம் செய்து கொடுப்பதற்கு தமிழ்நாடு வனத் தோட்ட கழகத்திற்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவிக்கின்றோம்.

இணைப்பு: மேலே கண்டபடி

தங்கள் உண்மையுள்ள,

நிர்வாக இயக்குநருக்காக.

நகல்: செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்,
ஊரக குடிநீர் விநியோக கோட்டம்,
12A, 2nd மெயின்ரோடு,
பொன்நகர், திருச்சி

அவர்களுக்கு அனுப்பப்படுகிறது. இப்பொருள் தொடர்பாக மாவட்ட வன அலுவலர் திருச்சி அவரை தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நகல்: மண்டல மேலாளர், புதுக்கோட்டை.
இப்பொருள் தொடர்பாக தொடர்ந்து மாவட்ட வன அலுவலர், திருச்சியை தொடர்பு கொண்டு முடிவான அறிக்கையை இவ்வலுவலகத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவும்.

உதிரி –1.